கட்டுவதற்கு ஆவன செய்யும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 232, மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

232—

தொழில் வளம்

***25439—திரு. ம. குணசேகரன்:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை மாவட்டத்தைத் தொழில் வளம் மிகுந்த மாவட்டமாக உருவாக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரையில் சிப்காட் நிறுவனம் ஏற்கெனவே ஒரு தொழில் வளாகத்தினை 492 ஏக்கர் நிலப் பரப்பில் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளுடன் ஏற்படுத்தி நிருவகித்து வருகிறது. அதில் 71 தொழிற்சாலைகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, இவற்றில் 17 தொழிற்சாலைகள் இயங்கி வருகின்றன. மேலும், 21 தொழிற்சாலைகளுக்குக் கட்டுமானப் பணிகள் தொடங்கியிருக்கின்றார்கள் என்ற செய்தியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு அம்மா அவர்கள், தென் மாவட்டங்களில் சிவகங்கை உட்பட பல்வேறு பகுதிகளுக்குச் சலுகைகளை அறிவித்திருக்கின்றார்கள். இன்னும் ஒரு தொழிற்பேட்டை அமைக்க இருக்கின்ற காரணத்தினால், வருங்காலத்தில் சிவகங்கை மாவட்டம் ஒரு தொழில் மாவட்டமாக மாறுவதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள் என்ற செய்தியை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2014 ஜூலை 23]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன் அவர்கள்.*

திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொன்மனம் படைத்த புரட்சித் தாயே, தமிழ் மண்ணின் மானம் காத்த தன்னிகரில்லாத் தமிழினத் தாயின் தலைமகளே, எங்கள் குலம் காக்க வந்த குல மகளே, மாண்புமிகு இதய தெய்வம் தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.*

எங்களுடைய சிவகங்கை மாவட்டம் ஒரு வறட்சியான மாவட்டமாகும். முழுக்க, முழுக்க விவசாயத்தையே நம்பியிருக்கக்கூடிய ஒரு மாவட்டம். இங்கு எந்தவிதமான தொழிற்சாலைகளும், தொழில் வளமும் கிடையாது. 444 ஊராட்சிகளும், 12 ஒன்றியங்களும், 3 நகராட்சிகளும், 12 பேரூராட்சிகளும், 7 தாலுகாக்களும் கொண்ட இந்த மாவட்டம் இன்னும் பின்தங்கிய நிலையிலேயே இருக்கிறது. கடந்தகால காங்கிரஸ் ஆட்சியிலும் மற்றும் கிட்டத்தட்ட 35 ஆண்டுகாலம் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த திரு. ப. சிதம்பரம் அவர்கள், எந்தவிதமான தொழில் வளர்ச்சியையும் அங்கு கொண்டுவராமல் சிவகங்கை மாவட்டத்தைப் புறக்கணித்திருக்கின்றார்கள். மேலும், அங்கு இருக்கின்ற ஏழையெளிய, இளைஞர்கள் மற்றும் படித்த மாணவ, மாணவியர்கள், எந்தவிதத் தொழிலும் செய்ய முடியாத அளவிற்கு அந்த மாவட்டத்தைப் புறக்கணித்திருக்கின்றார்கள். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய சீரிய சிந்தனையில், எங்கள் மாவட்டத்தில் ஏதாவது ஒரு தொழிலைத் தொடங்கி. . . (குறுக்கீடு)

முற்பகல் 10–40

திரு. என்.ஆர். ரெங்கராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை. மாண்புமிகு உறுப்பினர், துணைக் கேள்வியைக் கேளுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர், துணைக் கேள்வியைக் கேளுங்கள்.*

திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று எங்களுடைய மாவட்டத்தை ஒரு தொழில் வளம் மிகுந்த*

மாவட்டமாக உருவாக்குவதற்கு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகங்கை மாவட்டம் பின்தங்கிய மாவட்டம் என்ற காரணத்தினால்தான் ஏற்கெனவே அங்கு ஒரு சிப்காட் வளாகம் உருவாக்கப்பட்டு, அங்கு பல்வேறு தொழில்கள் நடந்து வருகின்றன. இன்னும் பல தொழிற்சாலைகளுக்குக் கட்டுமானப் பணிகளெல்லாம் நடைபெற்று வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, ஏற்கெனவே இருக்கின்ற தொகுப்புச் சலுகைகள் தவிர, தென் மாவட்டங்களுக்கென்று தனியாக புதிய சலுகைகளை மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்திருக்கின்றார்கள். மேலும், புதிதாக ஒரு சிப்காட் வளாகமும் ஏற்படுத்தவிருக்கின்ற காரணத்தினால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய நல்லாட்சியில், நிச்சயமாக சிவகங்கை மாவட்டம் தொழில் வளம் மிகுந்த மாவட்டமாக வருங்காலத்தில் உருவாகும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன் அவர்கள்.

திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த கூட்டத்தொடரின்போது, தென் மாவட்டங்களைத் தொழில் வளம் மிகுந்த மாவட்டங்களாக உருவாக்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று மாண்புமிகு இதய தெய்வம் தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்திருக்கின்றார்கள். தென் மாவட்டங்களுக்கு முக்கியத்துவம் அளித்திருக்கின்ற சூழ்நிலையில், சிவகங்கை மாவட்டத்தில் 2,000 இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கக்கூடிய வகையில், அதற்குத் தகுந்தமாதிரி ஒரு தொழிலைத் தொடங்குவதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள்

2014 ஜூலை 23]

சொல்லியிருக்கின்றார்கள். இதனை மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, இந்த நிதியாண்டிலேயே அதைத் தொடங்குவதற்கும், எங்களுடைய சிவகங்கை மாவட்டத்தை ஒரு தொழில் வளம் மிகுந்த மாவட்டமாக்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாக சிப்காட் வளாகம் உருவாக்குவதற்கு 2,700 ஏக்கர் நிலம் கண்டறியப்பட்டுள்ளது. கூடியவிரைவிலே அந்த நிலம் கையகப்படுத்தப்பட்டு, சிப்காட் வளாகம் ஏற்படுத்தி, அங்கே பெரிய தொழிற்சாலைகள் வருவதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் பல்வேறு முயற்சிகளைச் செய்து கொண்டிருக்கின்றார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் எதிர்பார்ப்பிற்கிணங்க, அங்கே தொழிற்சாலைகள் உருவாகும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.*

திரு. சு. குணசேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மானாமதுரை சிப்காட் வளாகத்தில் வீடியோகான் தொழிற்சாலை வரும் என்று அறிவித்திருந்தார்கள். அதற்கான கட்டுமானப் பணிகளெல்லாம் நிறைவுற்றதாகக் கேள்விப்படுகிறேன். அங்கே வீடியோகான் தொழிற்சாலை தொடங்கப்படுமா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மேலும், ஏற்கெனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சிவகங்கையிலே ஒரு தொழிற்பேட்டையை உருவாக்குவதற்கு நிலம் கண்டறியப்பட்டுள்ளதாகத் தெரிவித்திருக்கிறார்கள். அது எந்த இடம் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீடியோகான் நிறுவனம் கிட்டத்தட்ட கட்டுமானப் பணிகளை முடித்துவிட்டது. நிதிநிலை காரணமாக அந்தப் பணிகள் தற்சமயம் நிறுத்தப்பட்டிருக்கின்றன. இருந்தாலும், மாண்புமிகு அம்மா அவர்களுடைய முயற்சியால், இப்பொழுது அதனை மீண்டும் புதுப்பிக்கின்ற வகையிலே, பேச்சுவார்த்தை நடந்து கொண்டிருக்கின்றது. அந்தப் பேச்சுவார்த்தை முடிந்ததற்குப் பின்னால், அந்த வீடியோகான் தொழிற்சாலையைத் தொடங்குவதற்கான ஏற்பாட்டை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு செய்யும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் புதிதாக சிப்காட் வளாகம் ஏற்படுத்துவதற்கு எங்கு நிலம் கண்டறியப்பட்டுள்ளது என்று கேட்டிருக்கின்றார்கள். தேர்வு செய்ததற்குப் பின்னால் அதனைத் தெரிவிக்கின்றேன். ஏனென்று சொன்னால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஓர் இடத்தை எடுக்க வேண்டாம் என்று சொன்னால், இன்னொரு மாண்புமிகு உறுப்பினர் அந்த இடத்தை எடுங்கள் என்று சொல்கின்றார். எனவே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, அந்த இடத்தைத் தேர்வு செய்ததற்குப் பின்னால், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியப்படுத்தும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன் அவர்கள்.

திரு. க. பாண்டியராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தைத் தொழில் துறையில் முதலிடத்திற்கு அழைத்துச் செல்வதற்கு மிக ஆதாரமான விஷயம், சிவகங்கை போன்ற மாவட்டங்களைத் தொழில் வளம் மிகுந்த மாவட்டங்களாக உருவமைப்பது. அதற்கான கட்டமைப்புகள் உருவாக்கப்பட்டுவிட்டன. ஆனால், இந்த மாவட்டத்திலிருந்து வரும் தொழில்களுக்கு துணிகர நிதியம் – Venture Capital Fund– ஒன்று உருவாக்குவதற்கும், தொழில் முனைப்பு வளர்ச்சிக்கு, தொழில் முனைப்பை வளர்ப்பதற்கு, அங்கிருக்கின்ற கல்லூரிகளில் தொழில் முனைப்பு வளாகங்கள் Incubation Centres உருவாக்கப்படுவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்படுமா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

2014 ஜூலை 23]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 10—45

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள் தென் மாவட்டங்களுக்கு என்று பல்வேறு புதிய சலுகைகளை அறிவித்திருக்கின்றார்கள்.* VAT concession *பெறுவதற்கு 50 கோடி ரூபாய் முதலீடு என்று இருந்ததை, 10 கோடி ரூபாயாகக் குறைத்து அறிவித்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோருவதுபோல, மாண்புமிகு அம்மா அவர்கள் அரசால் தனியாக புதிதாக நிதியுதவி எதுவும் செய்யமுடியாது. தொழிற்சாலை ஆரம்பிக்க தொழில் முனைவோர்கள் முன்வருகிறபோது,* TIDCO *மூலம்* joint venture *போடுவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு தயாராக இருக்கிறது. ஆகையால், அதற்கென்று தனி நிதி ஒதுக்க முடியாது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 233, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. அஸ்லம் பாஷா, மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

233—

விரிவுபடுத்துதல்

***4663—திரு. அ. அஸ்லம் பாஷா:**

மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆம்பூர் சார்பதிவாளர் அலுவலகத்தை விரிவாக்கம் செய்யும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) ஆம். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், மூன்றாவது